செய்தி வெளியீடு எண்: 600 நாள்: 24.07.2008

## அரசின் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து நிறைவேற்றப்பட்டு வரும் சுனாமி மறுவாழ்வு மற்றும் மறு சீரமைப்புப் பணிகளின் செயல்பாடுகள் குறித்தது மாநில அளவிலான வழி நடத்தும் குழு கூட்டம் மாண்புமிகு நிதி அமைச்சர்அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சுனாமி மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களை விரைந்து செயல்படுத்திடும் பொருட்டு, மாண்புமிகு நிதி அமைச்சர் பேரரசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான வழி நடத்தும் குழுவின் நான்காவது கூட்டம் இன்று (24.07.2008) தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வழி நடத்தும் குழுவின் உறுப்பினர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, மாண்புமிகு சுற்றுச் சூழல்துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோயில் எம்.பி. சாமிநாதன், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி. சாமி, தலைமைச் செயலர் திரு. எல்.கே. திரிபாதி, மற்றும் அரசுத்துறையின் முதன்மைச் செயலர்கள், கால்நடை மற்றும் மீன்வளத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மற்றும் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சிறப்புப் பணி அலுவலர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு) மற்றும் தொடர்புடைய துறையின் துறைத் தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வழிநடத்தும் குழுவின் தலைவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையில், 'சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் மத்திய அரசு, பிரதமரின் தேசிய நிவாரண நிதி, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, பன்னாட்டு வேளாண்மை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் உதவியோடு 5,074.09 கோடி ரூபாய் செலவில் பல்வேறு நீண்டகால அடிப்படையிலான திட்டங்கள் தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற இரண்டரை ஆண்டு காலத்தில், ஏறத்தாழ 1,175 கோடி ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் ஏறத்தாழ 559 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 27,937 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன சென்னையில் மெரினா மற்றும் வடசென்னை மற்றும் சென்னை மாவட்டத்தில் ஏறத்தாழ 13,000 வீடுகள் அடுக்கு மாடி குடியிருப்புகளாக கட்டப்படவுள்ளன.

கடலோரப்பகுதியில் கட்டப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் அனைத்தும் கடலோர உப்புக்காற்று மற்றும் அலைகளால் பாதிக்கப்படாத வகையில் தகுந்த முறையில், அண்ணா பல்கலைக்கழக கட்டட பொறியியல் ஆய்வு மையம் போன்ற தகுதி வாய்ந்த

அமைப்புகளிடம் கலந்தாலோசிக்கப்பட்டு, அதற்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டதோடு, நடைபெற்று வரும் எஞ்சியுள்ள பணிகள் அனைத்தும் விரைவாக செயல்படுத்தப்பட்டு, அவைகளெல்லாம் உரிய காலத்திற்குள்ளாக முடிக்கப்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டுமாறும்' கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து துறை வாரியான பணி முன்னேற்ற அறிக்கையும் கலந்துரையாடலும் நடைபெற்றது.

**கடந்த இரண்டாண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள**
**சுனாமி மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள்**

**நிரந்தர குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் – பகுதி I**

- முழுமையாக பாதிக்கப்பட்டு புதிதாக கட்டப்பட்டு வரும் வீடுகளின் எண்ணிக்கை **53,289.**
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த **24.06.2006** அன்று ஆய்வு செய்த போது, கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை **8,406.**
- **30.06.2008** வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் **36,343** வீடுகளில் இவற்றில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சார்பில் **29,139** வீடுகளும், அரசின் சார்பில் **7,204** வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு **34,831** வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- தொண்டு நிறுவனங்களால் கட்ட இயலாத **3,911** வீடுகள்அரசின் சார்பில் கட்டப்பட்டு வருகின்றன.
- இரண்டு ஆண்டுகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளான மின் இணைப்பு, சாலை வசதி, தெரு விளக்கு, குடிநீர், சுகாதார வசதி ஆகியவற்றிற்காக **220.03** கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 4,053 குடியிருப்பு பகுதிகளுக்கு **3.10** கோடி ரூபாய் செலவில் தெரு விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. **22,463** வீடுகளுக்கு **3.17** கோடி ரூபாய் செலவில் மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- மீதமுள்ள **16,946** வீடுகளின் கட்டுமானப் பணிகளில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட வேண்டிய **1,893** வீடுகள் நவம்பர் திங்கள் **2008**–க்குள்ளாகவும், அரசின் சார்பில் கட்டப்பட வேண்டிய **15,053** வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப்பணி **31.12.2009**–க்குள்ளாக முடிவடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கியின் ஒப்புதலோடு 1920 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.
- சென்னையில் சுனாமியால் பாதிக்கப்பட்டு குடிசைகளிலும், தற்காலிகக் குடியிருப்புகளிலும் வசித்த **6511** குடும்பங்களுக்கு ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.
- சென்னை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கட்டப்பட வேண்டிய **13,000** வீடுகளில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில், திருவொற்றியூர் அகில இந்திய வானொலி நிலையத்திற்குச் சொந்தமான நிலத்தில் **3,616** அடுக்குமாடி குடியிருப்புகளும், ஒக்கியம் துரைப்பாக்கத்தில் **2,064** அடுக்குமாடி குடியிருப்புகளும், நொச்சிக்குப்பம் முதல் ஸ்ரீனிவாசபுரம் வரை (மெரினா திட்டத்தின் கீழ்) பழுதடைந்துள்ள அடுக்குமாடி வீடுகளை இடித்து அதே இடத்தில் **7,320** வீடுகளும் கட்டப்படவுள்ளன.
- இவைதவிர, கடலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சுனாமியினால் பாதிக்கப்படாத பழங்குடியினத்தைச் சார்ந்த இருளர் சமுதாய மக்கள், விவசாயக் கூலிகள், கடலுக்கு மிக அருகில் இருப்போர் ஆகியோருக்காக கூடுதலாக **6,019** வீடுகள் கட்டத்

திட்டமிடப்பட்டு, அவற்றில் **5,727** வீடுகள் **30.06.2008** வரை கட்டப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளன.

**இந்தியாவிலேயே முதன் முறையாக எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் அனைத்து பேரிடர்களையும் தாங்கிடும் குடியிருப்புகள்**

- கடந்த **24.06.2006** அன்று நடைபெற்ற கடலோர மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அரிய யோசனையின் அடிப்படையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முதன்முறையாக, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய இடங்களிலுள்ள குடிசை வீடுகள் மற்றும் இப்பகுதிகளில் “இந்திரா நினைவு குடியிருப்புகள்” மற்றும் அரசு நிதியுதவியுடன் **10** ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள வீடுகளில் வசிப்போருக்கு, அனைத்து வகையான இயற்கைச் சீற்றங்களையும் தாங்கிடக் கூடிய வகையிலான புதிய வீடுகளை கட்டித் தரலாம் என முடிவெடுக்கப்பட்டது.
- மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில், கட்டப்பட வேண்டிய வீடுகள் **56,233** எனவும், இதில் **43,014** வீடுகள் அதே இடத்திலும், **13,219** வீடுகள் மாற்று இடத்திலும் கட்டலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையில் இந்திரா நினைவு குடியிருப்பு போன்ற **11,601** வீடுகளும் அடங்கும்.
- முதற்கட்டமாக, “இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின்” கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையினரால் ஏறத்தாழ **16,379** வீடுகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்பட்டு, **13,122** வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன.
- தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினரால் **2100** வீடுகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று, **922** வீடுகளின் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளினை ஏற்று, மைய அரசு முதற் கட்டமாக **165** கோடி ரூபாய் விடுவித்துள்ளது.
- இவ்வாண்டின் இறுதிக்குள்ளாக, “இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் ” கீழ் ஏறத்தாழ **14,000** குடும்பங்களுக்கு **390.60** கோடி ரூபாய் செலவில் வீடுகள் வழங்கப்படும்.

**அடிப்படை கட்டமைப்பு வசதிகள்**:

- பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில், **111.24** கோடி ரூபாய் செலவில் **55** பாலங்களுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு விரைவாக நடைபெற்று வருகின்றன.
- கடந்த இரண்டாண்டுகளில் **6** பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. **26** பாலங்களின் கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. மீதமுள்ள பாலங்கள் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யும் நிலையில் உள்ளன.
- நாகப்பட்டினம், கடலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் **75.01** கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் **5** உயர்மட்ட பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- **1180** கி. மீ. நீளமுள்ள சாலைகளும், **2** துறைமுகங்களும், **11** இடங்களில் மீன்பிடி துறைமுகங்களும், **50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **10** இடங்களில் புதிய மீன்பிடி இறங்கு தளங்களும் அமைக்கப்படுகின்றன.
- கடந்த இரண்டாண்டுகளில், **965** கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- கடலூார் மற்றும் நாகப்பட்டினம் துறைமுகங்களில் **65.67** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட ஆழப்படுத்துதல் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

- **10** இடங்களில் அமைக்கப்படவுள்ள மீன் இறங்கு தளங்களில், **9** இடங்களுக்கான முடிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன.

**பாதிக்கப்பட்டோர் மற்றும் மீனவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள்:**

- பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம் திருவள்ளூர், விழுப்புரம், கடலூார், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மற்றும் திருவாரூர் ஆகிய **13** மாவட்டங்களிலுள்ள **591** கிராமங்களில் **151.95** கோடி ரூபாய் செலவில் பல்வேறு நிவாரண உதவிகளான, கட்டு மரம், வள்ளம், வலைகள், மீன்பிடி படகுகள், இயந்திரப் படகுகள் போன்ற நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு **42,000** மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.
- இவைதவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கூடுதலாக **110** கோடி ரூபாய் நிவாரண உதவி வழங்கிடுவதாக அறிவித்ததன் அடிப்படையில்,
- ஐஸ் பெட்டிகளுக்கு **36.12** கோடி ரூபாய், வலைகளுக்கு **44** கோடி ரூபாய், உயிர் காப்பு கவச உடைகளுக்கு **16.80** கோடி ரூபாய், அதிக பளு ஏற்றத்தக்க மிதி வண்டிகளுக்காக **8.40** கோடி ரூபாய், ஒளி விளக்குகளுக்காக **5.04** கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, **13,632** ஐஸ் பெட்டிகளும், **31,537** மிதி வண்டிகளும், **88,255** உயிர் பாதுகாப்பு கவச உடைகளும், **20,686** ஒளி விளக்குகளும் வழங்கப்பட்டுள்ளன. வலைகளுக்குப் பதிலாக மீனவர்களுக்கு தலா பத்து ஆயிரம் ரூபாய் நிதியுதவி நேரிடையாக வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- மேலும், மீனவர்களின் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்திடும் பொருட்டு, **19** கோடியே **56** இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு **5,635** மீனவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், தமிழக அரசின் வேண்டுகோளினையேற்று, மீனவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகையில், அசல் தொகை தள்ளுபடிக்காக **3.36** கோடி ரூபாய் நிதியினை பிரதமர் அலுவலகம் விடுவித்துள்ளது.

**விளையாட்டு உபகரணங்கள்:**

- **591** கடலோர கிராமவாழ் மக்கள் பயன்பெறும் வகையில், கால் பந்து, கூடைப் பந்து, கேரம், சதுரங்கம் போன்ற விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட பிரதமர் அலுவலகம் **59** இலட்சம் ரூபாய் வழங்கி இவை அனைத்து கிராமங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**வாழ்வாதாரத் திட்டங்கள்:**

- சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை (livelihood) மேம்படுத்திடும் வகையில் **223.40** கோடி ரூபாய் செலவில், பல்வேறு திட்டங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, பேரூராட்சிகள் துறை, நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகிய துறைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- நாளதுவரையில் உருவாக்கப்பட்டுள்ள **61,995** மகளிர் சுயஉதவிக் குழுக்களில், **38,217** குழுக்களுக்கு சுழல் நிதியுதவியாக **102.41** கோடி ரூபாயும், **3,875** குழுக்களுக்கு பொருளாதார நிதியுதவியாக **39.77** கோடி ரூபாயும், **35,732** உடல் ஊனமுற்றோருக்கான மானிய நிதியுதவியாக **35.73** கோடி ரூபாயும், ஆக மொத்தம் **187.81** கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- **மேற்கண்ட தொகையில், கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் உருவாக்கப்பட்டுள்ள 37,984 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியுதவியாக 99.77 கோடி ரூபாயும், 3,046 குழுக்களுக்கு பொருளாதார நிதியுதவியாக 28.39 கோடி ரூபாயும், 35,732 உடல் ஊனமுற்றோருக்கான மானிய நிதியுதவியாக 35.73 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 173.46 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.**
- மேலும், **1,55,420** குழு உறுப்பினர்களுக்கு **9.90** கோடி ரூபாய் செலவில், பல்வேறு திறன் பயிற்சிகளான நண்டு வளர்த்தல், காளான் வளர்த்தல், சமையல் பயிற்சி, சணல் பொருட்கள் தயாரித்தல், கம்போஸ்ட் உரங்கள் தயாரித்தல், ஸ்கிரீன் பிரிண்டிங், ரொட்டிகள் தயாரித்தல், மெழுகு வர்த்திகள் தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல் போன்ற தொழில் சார்ந்த திறன் பயிற்சிகளும், கணினி பயிற்சி, ஊதுபத்திகள், காகிதப்பை, மாலைகள், பழச்சாறுகள், சணல் பைகள், காலணி மேற்பகுதி, தரைவிரிப்பு, பூங்கொத்துகள் ஆகியன தயாரித்தல், அழகுக்கலை மற்றும் எம்பிராய்டரி போன்ற பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன.
- **இவ்வாழ்வாதாரத் திட்டங்களின் கீழ், நாளது வரையில் ஏறத்தாழ 42,500 சுய உதவி குழுக்களும், 6,37,500 நபர்களும் பயனடைந்துள்ளனர்.**

**மாணவர்கள் பயன்பெற கல்வி சார்ந்த உதவி திட்டங்கள்:**

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த **24.06.2006** அன்று சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மற்றும் சிறப்பு கட்டணம் ஆகியவற்றை மேலும் ஓராண்டுக்கு அரசின் சார்பில் வழங்கப்படும் என்று அறிவித்ததின் அடிப்படையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் **58,488** மாணவர்கள் பயன்பெறும் வகையில் **29.01** கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- சுனாமியினால் பெற்றோர்களில் ஒருவரை இழந்த **1513** குழந்தைகளின் பெயரில், ஏறத்தாழ **7** கோடியே **71** லட்சத்து **63** ஆயிரம் ரூபாய் வங்கியில் நிரந்தர வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் பெறப்படும் வட்டியானது, அக்குழந்தைகளின் கல்விச் செலவிற்கு பயன்படுத்திடவும் வகை செய்யப்பட்டுள்ளது.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் **1–**ஆம் வகுப்பு முதல் **10–**ஆம் வகுப்பு வரை தொடர்ந்து பயில, மாதந்தோறும் **300** ரூபாய் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. **2005–06** கல்வியாண்டில் **81,264** மாணவர்களுக்கும் **2006–07** ஆம் ஆண்டில் **1,29,975** மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக மொத்தம் **55** கோடியே **32** லட்சத்து **76** ஆயிரத்து **600** ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. **2007–08–**ம் ஆண்டில் **1,27,125** மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக **45** கோடியே **76** லட்சத்து **50** ஆயிரம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

**சமூக பாதுகாப்புக்கான அடிப்படை கட்டமைப்புத் திட்டம்:**

- இத்திட்டத்தின்கீழ், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் **63** இடங்களில் **(TRAUMA CARE CUM RECREATION CENTERS)** கட்ட **1.90** கோடி ரூபாயும், முதலுதவிப் பெட்டிகள் வழங்கிட **9.40** கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன.

**சுகாதார காப்பீட்டுத் திட்டம்:**

- சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுகாதார காப்பீடு செய்திட 'யுனைடெட் இந்தியா காப்பீடு' நிறுவனத்துடன் இணைந்து, பிரதமர் அலுவலகம் வழங்கியுள்ள **7** கோடியே **77** இலட்சம் ரூபாய் நிதியுதவியில் ஒரு இலட்சத்து **53** ஆயிரத்து **294** குடும்பங்கள் காப்பீடு வசதி பெற்றுள்ளனர்.

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் செயல்படுத்தப் பட்டு வரும் பணிகள்:**

- **15** மாநிலங்களைச் சார்ந்த **160** நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஏறத்தாழ **23** கோடி ரூபாயினை வழங்கியுள்ளனர்.
- அந்நிதியிலிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமுதாயக்கூடம், ஆதரவற்றோர் இல்லம், முதியோர் இல்லம், புயல் பாதுகாப்பு மையம், பள்ளி கட்டடம் கட்டுதல், மீன் உலர்த்துமிடம் போன்ற **179** பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாளதுவரையில், **175** பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகளனைத்தும் விரைவாக நடைபெற்று வருகின்றன.